" முதுகுளத்தூரில் நடந்தது என்ன? " என்பதுபற்றி பலரும் பலவிதமாக பேசுகிறார்கள்—எழுதுகிறார்கள். தனிப்பட்ட நோக்கங்களைக் குறிக்கோளாகக் கொண்டு உண்மையைத் திரித்துக்கூறி பொதுமக்களின் உள்ளத்திலே பற்பல பொய்யான எண்ணங்களை விதைத்து விடுகின்றனர் சிலர். எனவே உண்மையான நிலைமையைப் பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்நூல் வெளியிடப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முதுகுளத்தூரிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் அண்மையில் நடந்த வகுப்பு கலவரங்கள், போலீஸ் நடவடிக்கைகள்பற்றி உள்நாட்டுதுரை அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்கள் சட்ட மன்றத்தில் வெளியிட்ட அறிக்கையும் அதன் மீது நடைப்பெற்ற விவாதத்திற்கு விடை அளித்த நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்ரமணியம் அவர்களின் சொற்பொழிவும் இவ்வெளியீட்டில் அடங்கியுள்ளன.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, may I say the House gives you 60 per cent of marks for your reading? (Laughter.)

MR. SPEAKER : Thanks. To put it in English, it is stated that, for personal ends, some people misrepresent the facts about what happened in Mudukalathur and create wrong impressions in the minds of the public and that the pamphlet, which contains the statement of the Hon. Sri M. Bhakatavatsalam on " What happened in Mudukalathur " and the reply to the debate thereon by the Hon. Sri C. Subramaniam, is issued with a view to acquainting the public with the true facts of the situation.

A possible inference from the Preface might be that only the Ministers' speeches represent facts and speeches by others do not. It may be contended, no doubt, that it does not refer specifically to the speeches by Members of the Legislature, but in so far as they contain replies to the points raised by them in their speeches, the Preface could be held to reflect on the Members of the Assembly, though not named, who made those speeches.

It is presumably on these facts that it has been alleged that the publication is intended to scandalise the Opposition parties, but it is difficult to decide whether this was really so without a detailed examination of the portions omitted and the circumstances leading to this publication.

I do not wish to discuss the matter further at this stage. But *prima facie* I think this is a case which should go to the Privileges Committee. I have, therefore, preferred to refer this matter to the Committee of Privileges instead of deciding it myself. The Committee will, I am sure, go into the question as to how far the speech as contained in the pamphlet is a faithful report of the proceedings of the House and whether this publication constitutes a breach of privilege and if so, what steps this House should take in this matter.

VI.—DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN THE YEAR 1954–55.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I rise to present the statement of Demands for grants for excess expenditure in the year 1954–55 [a]. The appropriations originally provided for

[a] Printed as Appendix II on pages 95–99 infra.

10th February 1958] [Sri C. Subramaniam]

in the Budget Estimates cannot in the nature of things be expected to tally entirely with the actuals and excesses under some grants are inevitable. The total of the expenditure excesses which is now sought to be covered by Legislative approval is Rs. 19 lakhs roundly against a total final appropriation of Rs. 9,192 lakhs. The explanatory note appended to the statement of demands gives the reasons for the excesses in each case. The Public Accounts Committee constituted for the year 1957–58 at its meetings held during the course of the year examined the reasons for the excesses and have recommended in their report published in October 1957 that demands for grants to cover the excess expenditure over the final sanctioned appropriation under each grant might be presented to the Legislative Assembly.

I commend for the acceptance of the House the statement of Demands for Grants for Excess Expenditure in the year 1954–55.

VII.—DISCUSSION ON GOVERNOR'S ADDRESS.

MR. SPEAKER : We shall now take up discussion on the Governor's Address. Four days have been allotted for discussion on the Governor's Address, that is, 10th to 13th February 1958.

*SRI R. KRISHNASWAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, இம்மாதம் 8-ம் தேதியன்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் இச்சபையின் முன் நிகழ்த்திய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையிலே நான் அனுப்பியுள்ள தீர்மானத்தை பிரேரேபிக்கிறேன். அந்தத் தீர்மானத்தை ஒட்டி சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

"That an humble address be presented to the Governor that the Members of the Madras Legislative Assembly thank him for the Address delivered to the Members of the Legislature on the 8th February 1958."

கவர்னர் அவர்களுடைய பேருரையிலே பொதுவாக நம் நாட்டிலும் இந்த ராஜ்யத்திலும் நடைபெறவேண்டிய பல்வேறு விஷயங்களைக் குறித்து அவர்கள் பேசியுள்ளார்கள். நம் மாகாண கவர்னர் அவர்கள் பாரத கண்டத்தின் ஒரு கோடியிலுள்ள அஸ்ஸாம் மாகாணத்திலிருந்து இங்கு வந்தவர். அவர்களுடைய பேருரையிலேயே கூறியிருக்கிறார்கள் : "உங்கள் மாகாணத்தைப் போன்று டில்லியில் இருந்து நெடும் தூரத்திலுள்ள ஒரு மாகாணத்தைச் சேர்ந்தவன் நான்" என்று கூறியிருக்கிறார். அதோடுகூட அவர்களுடைய பிரசங்க ஆரம்பத்திலேயே "உங்களுடைய ஒத்துழைப்பும் அன்பும் எனக்கு வேண்டும்" என்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய முழு ஒத்துழைப்பையும் அவர்களுக்குத் தரமுடியும் என்று நான் கூறிக்கொள்ள முடியம். அதற்கு இந்தச் சபையிலே நம்முடைய ராஜ்யத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளுடைய ஒத்துழைப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனேயே இந்த வார்த்தைகளை நான் கூறுகிறேன். அவ்வாறு கிடைக்கும் என்பதற்கான ஆதாரங்கள் இருப்பது குறித்தும்கூட நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் சமீபத்தில் 8-ம் தேதியன்று கவர்னர் அவர்கள் இந்தச் சபையிலே உரை நிகழ்த்தியபோது அவர்கள் கட்சியனர் இங்கு வரக்கூடாமைக்கு காரணங்கள் சில கூறி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கவர்னர் அவர்களுக்கு அவர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்கும் என்றும், கவர்னர் அவர்களுடைய நடவடிக்கைகளில் இந்த ராஜ்யத்தின் சகல விஷயங்களையும் மிகவும் பொருப்பாக இருந்து நடத்துவார்கள் என்ற